ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2221/55 - 2021 අප්‍රේල් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.04.01

*2221/55 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**நாணய விதிச் சட்டம்**

*நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 32 உ ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பேராசிரியர் **டபிள்யு. டி. லக்ஷ்மன்,**
*தலைவர்,*
*நாணயச் சபை.*

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
*2021, ஏப்பிறல் 01.*

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்ட ஒழுங்குவிதிகள்**

***2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்***

1. இவ்வொழுங்குவிதிகள், "2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள்" என எடுத்துக்காட்டப்படல் வேண்டும். எடுத்துக் காட்டல்

1A - G 34116 — 29 (2021/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

முதன்மை ஒழுங்குவிதிக்கான திருத்தம்

2. 2010, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட 1673/11 ஆம் இலக்க **அதிவிசேட வர்த்தமானியில்** பிரசுரிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அதன் ஒழுங்குவிதி 9 இல், அவ்வொழுங்குவிதியின் 9.4 ஆம் பந்தியினை நீக்கி பின்வரும் பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் :-

"9.4 குறித்துரைக்கப்பட்டவாறான வரையறைகளினுள் நட்டஈடு, உரிமம் இடைநிறுத்தல் அல்லது இரத்துச் செய்தல் திகதியிலிருந்து விடயத்திற்கேற்றவாறு விரைவாகக் கொடுப்பனவு செய்யப்படும். மேலும் தொடர்கின்ற காலப்பகுதியில் வட்டி எதுவும் செலுத்தப்படாது."

(ஆ) அதன் ஒழுங்குவிதி 9 இல், அவ்வொழுங்குவிதியின் 9.6 ஆம் பந்தியினை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் :-

"9.6 வைப்பாளர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்படற்பாலதான நட்டஈட்டுத் தொகையானது, இலங்கை ரூபா வைப்புக்கள் தொடர்பில் உயர்ந்தபட்சம் பதினொரு இலட்சம் ரூபா (ரூ. 1,100,000) அல்லது வெளிநாட்டு நாணய வைப்பு விடயத்தில் அதற்குச் சமமான ரூபாவில் மற்றும் அத்தகைய தொகை பதினொரு இலட்சம் ரூபாவை (ரூ. 1,100,000) விஞ்சுமாயின் அத்தொகை வரையில் மேலே கணிக்கப்பட்டவாறு மொத்த காப்புறுதி செய்யப்பட்ட வைப்புகளுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்."

(இ) அதன் ஒழுங்குவிதி 9 இல், 9.10 ஆம் பந்திக்கு உடன் அடுத்ததாக பின்வரும் பந்தியினை உட்சேர்ப்பதன் மூலம் :-

"9.11 உரிமம் இரத்துச் செய்யப்பட்டுள்ள அங்கத்துவ நிறுவனமொன்றின் விடயத்தில், அதன் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள், அத்தகைய அங்கத்துவ நிறுவனத்தின் தீர்த்துக்கட்டல் தொடர்பில் தகைமை வாய்ந்த நீதிமன்றத்தினால் தீர்த்துக்கட்டுபவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர், தகைமையுடைய நட்டஈட்டிற்காக உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட கோரிக்கையினை அத்தகைய காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள் சமர்ப்பித்த வரையில் மாத்திரம் இவ்வொழுங்குவிதியின் கீழ் நட்டஈட்டுக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும்."

நிலைமாறுகால ஏற்பாடுகள்

3. இவ்வொழுங்குவிதித் திகதிக்கு முன்னர் உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ள அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ள அங்கத்துவ நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள், விடயத்திற்கேற்றவாறு இவ்வொழுங்கு விதியின் கீழ் உயர்ந்தபட்சம் பதினொரு இலட்சம் ரூபா (ரூ. 1,100,000) அல்லது வெளிநாட்டு நாணய வைப்புகள் விடயத்தில் அதற்குச் சமமான நட்டஈட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும். ஆயினும், அத்தகைய காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள் :-

(அ) ஒன்றில் அத்திகதியில் நட்டஈட்டினை கோரியிருக்காதவர்களாகவிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) அவர்களது கோரிக்கையினை ஏற்கனவே மேற்கொண்டு, ஆனால் அத்திகதியில் நட்டஈடு செலுத்தப்படாதவர்களாகவிருத்தல் வேண்டும் ; அல்லது

(இ) ஏற்கனவே நட்டஈட்டுத் தொகைகள் செலுத்தப்பட்டுள்ள, ஆனால் அத்தகைய நட்டஈடு பதினொரு இலட்சம் ரூபாவை (ரூ. 1,100,000) விட குறைவானதாகவிருத்தல் வேண்டும்.

04-536

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.